### சோழிங்கநல்லூர் தொகுதியில் - அரசு இடங்களில் நீண்டகாலமாக குடியிருப்போருக்கு

# நிபந்தனைகள் இல்லாமல் பட்டா வழங்க வேண்டும்!

## சட்டப் பேரவையில் எஸ்.அரவிந்த் ரமேஷ் பேச்சு!

**சென்னை, ஏப். 10 -**

**சட்டப் பேரவையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில பேசிய சோழிங்கநல்லூர் தொகுதி கழக உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், அரசு இடங்களில் குடியிருப் போருக்கு நிபந்தனைகள் ஏது மன்றி பட்டா வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.**

**சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் பேசியதாவது:**

2025-2026 ஆம் ஆண்டிற்கான வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியதற்கு முதலில் நான் நன்றியைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற நாயகர், முன்னாள் முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

தமிழகத்தை முன்னேற்றப் பாதையில், சீர்மிகு திட்ட ங்களாலும், கம்பீரத்தோடு வழிநடத்திவரும், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களை பணிந்து வணங்குகிறேன்.

அறிவில் தாத்தாவையும், ஆற்றலில் அப்பாவையும், ஒருங்கேபெற்று புதுமைகளை படைத்துவரும் தமிழ்நாட்டின் இளைய சூரியன் எங்கள் சின்னவர், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி மகிழ்கிறேன்.

இப்பேரவையின் கருத்துக் கருவூலமாக திகழும் அவை முன்னவர் அவர்களுக்கும், எளிமையின் சிகரம் எங்களையெல்லாம் அன்போடும், பாசத்தோடும் வழிநடத்தும் எங்கள் மாவட்ட அமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், ஏனைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், குறிப்பாக, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அக்கா தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கும், கனிவோடும், கம்பீரத்தோடும் சபையினை நடத்தும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என் அன்பு வணக்கம்.

சோழிங்கநல்லூர் தொகுதியில் 2வது முறையாக உதயசூரியன் சின்னத்தில் 35,405 வாக்கு வித்தியாசத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்த பாசம் நிறைந்த சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், தோழமைக் கட்சி உட்பட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அனைவருக்கும் வீடு எனும் உயரிய நோக்கம்!**

இந்தாண்டு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்காக, இந்த நிதியாண்டில் நம் அரசு ரூ.7,718 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அனைத்துத் தரப்பு மக்களும் சமுதாயத்தில் எல்லாவிதமான வளர்ச்சியையும் அடைய வேண்டும் என்பதே இவ்வரசின் முதன்மையான நோக்கமாகும். அந்த வகையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, ஏழையெளிய மக்களின் பொருளாதார நிலையினை உயர்த்தி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, முனைப்புடன் செயல்பட்டு வருவதை நாம் காண்கிறோம். அனைவருக்கும் வீடு என்ற உயரிய நோக்கத்துடன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் செயல்பட்டு வருகிறது.

**பெரும்பாக்கத்தில் விளையாட்டு அரங்கம்**

கடந்த கால 5 ஆண்டு ஆட்சியில் என் தொகுதி சார்ந்த வினாக்களை விதி 38ன்கீழ் அதிக அளவில் கேட்டதில் சக சட்டமன்ற உறுப்பினர்கள் வரிசையில் 3வது இடம் பிடித்தவன். ஆனால், எந்தப் பணிகளும் நடைபெறாமல் காலம்தான் கடந்தது. இன்று கேட்காமலே கொடுக்கின்ற நம் திராவிட மாடல் முதல்வர் இருக்கின்றார். அதற்கு என் தொகுதி மக்களின் சார்பில் முதல்வருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) துணை முதல்வருக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு உயர் அதிகாரிகளுக்கும் நன்றி சொல்வது என் கடமை என்ற நிலையில், சோழிங்கநல்லூர் தொகுதி, செம்மஞ்சேரியில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் சிட்னி, லண்டன் ஒலிம்பிக் பூங்கா போன்று உலகின் சிறப்பு வாய்ந்த விளையாட்டு அரங்கம் அமையவுள்ளது என்பது வரலாறு. தொகுதி இளைஞர்களின் சார்பில் முதல்வர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்வளத் துறையின்மூலம் மழைநீரால் ஏற்படும் பாதிப்பை தடுக்கின்றவகையில், அரசன்கழனி முதல் பெரும்பாக்கம் வரையும், அணை ஏரி முதல் வேளச்சேரி சாலை வரையும், நாராயணபுரம் ஏரி முதல் சதுப்பு நிலம் வரையும், மழைநீர் மூடு கால்வாய் அமைத்து கொடுத்ததற்கும், மேலும், இந்த நிதி ஆண்டில் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் முதல் பக்கிங்ஹாம் வழியாக கடலில் மழைநீர் செல்லுகின்ற வகையில் கால்வாய் அமைக்க 91 கோடி ரூபாயும், ஒக்கியம் மடுவை மேம்படுத்த 27 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்த அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக பொதுமக்கள் பயன்பெறுகின்ற வகையில், பெருநகர சென்னை மாநாகராட்சியில் 16 நகர்ப்புற சமுதாய நலவாழ்வு மையமும் மற்றும் பெரும்பாக்கத்தில் 262 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்க 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அந்தப் பணிகள் முடியும் நிலையில் உள்ளது. அதற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன்.

இன்றைக்கு நெடுஞ்சாலைகள் மற்றும் பொதுப் பணித் துறையின்மூலமாக மழைநீர் கால்வாய்கள் மற்றும் ECR சாலையை அகலப்படுத்தும் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெறுவதற்கு நன்றி. இந்த ஆண்டு திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை 14.2 கி.மீ. உயர் மட்டப் பாலம் அமைக்கும் பணிக்காக 2,100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. துரைப்பாக்கம் radial சாலை முதல் ECR சாலை வரை இணைக்கும் 23 கோடி மதிப்பிலான சாலை அமைப்பதற்கும், 36 கோடி ரூபாயில் மேம்பாலம் அமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து தந்ததற்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

**பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள்!**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக சாலைகள், பூங்காக்கள், மின் மயானங்கள், குளங்கள், விளையாட்டுத் திடல்கள், சமுதாய நலக்கூடம் போன்ற எண்ணற்ற அடிப்படைப் பணிகளை மக்களுக்கு நிறைவேற்றித் தந்திருக்கின்ற இந்த திராவிட மாடல் ஆட்சியின் கீழ், குறிப்பாக, 268 கி.மீ. தொலைவிற்கு மழைநீர் கால்வாய்ப் பணிகளும், 511.34 கி.மீ. தொலைவிற்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளும், 206.29 கி.மீ. தொலைவிற்கு குடிநீர் வழங்கல் போன்ற பணிகளும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு அமைச்சர் கே.என். நேரு அவர்களுக்கு நன்றி. அதே நேரத்தில், விடுபட்டுள்ள 835 தெருக்களில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கும், 773 தெருக்களில் குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளுக்கும் மற்றும் 7 ஊராட்சிகள் சென்னைக்கு நிகராக வளர்ந்து வரும் ஊராட்சிகளாக இருப்பதனால், அப்பகுதிகளுக்கு பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வழங்கல் பணிகளுக்கும் நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**7 ஊராட்சிகளை மாநகராட்சியுடன் இணைப்பீர்!**

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 7 ஊராட்சிகளில் சுமார் 1,88,000 வாக்காளர்கள் உள்ளனர். எனவே, சென்னையில் வளர்ந்து வருகிற ஊராட்சியாக இருப்பதால் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட வேண்டுமென்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள், விரும்புகிறார்கள். அதையும் சென்னையுடன் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையின்மூலமாக 2006-2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டாக்களை கிராமக் கணக்கில் ஏற்றி, ரயத்துவாரியாக வகை மாற்றம் செய்து, கணினி பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, துணை முதல மைச்சர் அவர்கள், அவரது திருக்கரங்களால் பட்டாக்களை வழங்கியதற்கு தொகுதி மக்களின் சார்பில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட நாட்களாக கிராம நத்தம் அரசு இடங்களில் குடியிருப் போருக்கு பட்டா வழங்கப்படாமல், belt area என்ற நிபந்தனை இருந்ததைத் தளர்த்தி, பட்டா வழங்குவதற்கு உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், துறைசார்ந்த அமைச்சர் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**குடியிருப்போருக்கு பட்டா வழங்குக!**

அதேபோன்று, அரசு இடங்களில் குடியிருந்து வருபவர்களுக்கு 2006-2011 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ஆட்சியில் தனி அலுவலர்களை நியமித்து பட்டா வழங்கியதுபோல், வருமான வரம்பு இல்லாமல், 1 சென்ட், 2 சென்ட், 3 சென்ட் என்ற நிபந்தனைகள் ஏதுமில்லாமல், ஏழையெளிய மக்களின் கனவை நிறைவேற்றித் தந்த கலைஞர் அவர்களின் வழியில், எல்லோருக்கும் எல்லாம் என்ற இலட்சியத்துடன் அரசை நடத்திவரும் தளபதி அவர்கள் இதனை நடைமுறைப்படுத்தி பட்டாக்களை வழங்க வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஊரக வளர்ச்சித் துறை மற்றும் CMDAபெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமம் மூலமாக புனித தோமையார் மலை ஒன்றியத்தில், இதுவரை வரலாற்றில், இவ்வளவு சாலைகள், இவ்வளவு மழைநீர் கால்வாய்கள், பூங்காக்கள் அமைந்ததா என்று மக்கள் ஆச்சரியத்தோடு இந்த திராவிட மாடல் ஆட்சியை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சிகளுக்கு சிமெண்ட் சாலைகள், மழைநீர் கால்வாய்கள், பூங்காக்கள் மற்றும் ஏரிகளை மேம்படுத்துவதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு அமைச்சர் அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கும், இந்தப் பணிகளை செய்துமுடித்த அமைச்சர் இ. பெரியசாமி அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீதமுள்ள சாலைகள், பூங்காக்கள், சமூகநலக் கூடங்கள் மற்றும் ஏரிகளை மேம்படுத்த, இன்றைக்கு எங்களுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின்மூலமாக அமைச்சரிடம் ஒரு நீண்ட மனுவைக் கொடுத்திருக் கின்றேன். அந்தப் பணிகளையும் மிக விரைவில் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**ஏரிகளை மேம்படுத்துக!**

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கொள்கை விளக்கக் குறிப்பு பக்க எண் 101ல் ஏரிக்கரை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தம் 12 ஏரிகள் அடையாளம் காணப்பட்டு, அதில் பெரும்பாக்கம் மற்றும் வேளச்சேரி ஏரிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள பெருங்குடி, செம்பாக்கம் போன்ற ஏரிகளையும், நீர்நிலை களையும் பாதுகாக்கின்ற முதல்வர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. மேலும், சோழிங்கநல்லூர் தொகுதியில் சோழிங்கநல்லூர், நன்மங்கலம், மேடவாக்கம், சித்தாலப்பாக்கம், வேங்கைவாசல், கோவிலம்பாக்கம் மற்றும் ஒட்டியம்பாக்கம் ஆகிய ஏரிகளையும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் எடுத்து மேம்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கொள்கை விளக்கக் குறிப்பு பக்க எண் 101ல். பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் தனியார் பள்ளிகளுக்கு இணையாக கூடுதல் வகுப்பறை கட்டும் பணிகளுக்காக பல பள்ளிக் கட்டடங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேடவாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியை பெண்கள் தனி பள்ளியாக பிரிக்க வேண்டும் என்று அங்குள்ள மாணவச் செல்வங்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோருடைய கோரிக்கையாக இருக்கின்றது. அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்கம் 44ல், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம், சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரில் 18 திட்டப் பகுதிகளில் 5,256 அடுக்குமாடிக் குடியிருப்பு களை, ரூ.1,051 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்ய இந்த நிதியாண்டில் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், மேலும் பக்கம் 68ல், சென்னை, பெரும்பாக்கம் மறுகுடியமர்வு திட்டப் பகுதியில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.24.31 கோடியும், குடிநீர் வழங்கும் குழாய்கள் அமைக்க ரூ.8.16 கோடியும் வழங்கியதற்கு முதல்வர் அவர்களுக்கும், துறைசார்ந்த அமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த எங்கள் மாவட்ட மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**முதல்வருக்கு நன்றி!**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் சென்னையில் மொத்தம் 1,34,434 குடியிருப்புகள் உள்ளன. அதில், சோழிங்கநல்லூர் தொகுதியில் மட்டும் பெரும்பாக்கம், கண்ணகி நகர், எழில் நகர் மற்றும் சுனாமி நகர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் 55,176 குடியிருப்புகள் உள்ளன. கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில், ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற இந்தக் குடியிருப்புகளின் வளர்ச்சிக்கு எந்தவித நிதி ஒதுக்காமலும், கண்டுகொள்ளாமலும் இருந்ததைக் கண்டு, தாய் உள்ளத்தோடு நம் திராவிட மாடல் ஆட்சியில் தமிழக முதல்வர் அவர்களும் மற்றும் துறை சார்ந்த அமைச்சர் அவர்களும் பலமுறை அந்தப் பகுதிகளில் நேரடியாக ஆய்வு செய்து, பழுதடைந்த குடியிருப்புகளை மறுசீரமைக்கவும், அனைத்துக் குடியிருப்புகளுக்கும் தங்கு தடையின்றி குடிநீர் வழங்க குடிநீர்த்தொட்டி அமைக்கவும், சாலைகள், பூங்கா, நூலகம், சமுதாய நலக் கூடம் போன்ற அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி, பொதுமக்கள் நிம்மதியாக வாழ்கின்ற நிலையை உருவாக்கியதால், எந்தவிதமான போராட்டங்களோ, ஆர்ப்பாட்டங்களோ இல்லாமல் வாழ்கின்றனர். அனைத்து அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றித் தந்த இந்த திராவிட மாடல் ஆட்சியில், 'எல்லார்க்கும் எல்லாம்' என்பதை உறுதி செய்த முதல்வர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், எழில் நகர் திட்டப் பகுதியில் 5,664 குடியிருப்புகளைச் சீரமைக்க 22.65 கோடி ரூபாயும், பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் 8,352 குடியிருப்புகளைச் சீரமைக்க சுமார் 50 கோடி ரூபாயும் தேவைப்படுகிறது. அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கொட்டிவாக்கம் இளங்கோ நகர், கோவிலம்பாக்கம் சத்தியாநகர், பள்ளிக்கரணை மயிலை பாலாஜி நகர், உள்ளகரம் ஆகிய பகுதிகளில் வாரியத்தின் கிரையப் பத்திரம் வழங்க வேண்டும். கடந்த 1990 ஆம் ஆண்டு காலங்களில் பின் பற்றப்பட்ட அரசாணை எண் 804ஐ மீண்டும் நடைமுறைப்படுத்திட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மேம்பாலம் அமைக்க நிதி ஒதுக்கீடு!**

OMRECRக்கு இடைப்பட்ட இடத்தில் மக்களுக்கு பயன்பெறுகின்ற வகையில், 4,375 ஏக்கர் நிலப்பரப்பில் செயற்கை நீர்த் தேக்கம் அமைக்க 350 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட OMR சாலை மற்றும் மேடவாக்கம் சாலைகளில் மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் OMR சாலை சந்திப்புகளில் 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று மேம்பாலங்கள் அமைக்க நிதியை ஒதுக்கினார்கள். கடந்தகால அ.தி.மு.க ஆட்சி அதைக் கண்டுகொள்ளவில்லை. தற்போது அந்த மூன்று மேம்பாலங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கும், அனை த்துப் பணிகளையும் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்த நிதிய மைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புறநகர் பேருந்து நிலையம் அமைத்திடுவீர்!**

சோழிங்கநல்லூர் தொகுதிக் குட்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அதிகளவிலான மக்கள் வந்து செல்கின்றனர். எனவே, அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நீலாங்கரையில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு மாநிலங்களிலிருந்தும், பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மக்கள் சென்னையில் குடியேறி பணிகளைச் செய்து வருகிறார்கள். எனவே, அங்கு ஒரு புறநகர் பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக முதல்வரின் முன்னெடுப்புத் திட்டம் என்ற பெயரில் ஒரு புதிய திட்டம் 3.6.2023 அன்று தொடங்கப்பட்டது. வாரியத்தின் மூலமாக வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பால் 16 இடங்களில் பெட்டிகள் வைக்கப்பட்டு, மனுக்கள் பெறப்பட்டன. இதில் பெறப்பட்ட 5,386 மனுக்களில் 4,488 மனுக்கள் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பானவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், நான் சார்ந்திருக்கின்ற தொகுதியான சோழிங்கநல்லூர் விக்னேஷ்வரா நகர், பள்ளிக்கூடம் சாலை பகுதி II ஆகிய பகுதிகளிலிருந்தும் மனுக்கள் பெட்டியில் போடப்பட்டன. (மணியடிக்கப்பெற்றது) அதன் அடிப்படையில், 30 ஆண்டு கால மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுகின்ற வகையில், நில அளவு செய்து, அதன் விவரங்களைச் சேகரிக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

அமைச்சர் sமுத்துசாமி அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கொண்டு இவர்களுக்கு 3 சென்ட், 4 சென்ட் என இடங்கள் மட்டுமே உள்ளதால், இவர்கள் அனைவருக்கும் சுழற்சி முறையில் இல்லாமல் முன்னுரிமை அடிப்படையில் விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களையும், அலுவலர் பெருமக்களையும் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

**துணை முதல்வருக்கு நன்றி!**

இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய துணை முதலமைச்சர் அவர்கள் இரவு, பகல் பாராமல் மழை நேரத்தில் பள்ளிக்கரணை பகுதிகளுக்கு, அதேபோல், அம்பேத்கர் சாலை, கோவிலம்பாக்கம், நாராயணபுரம் ஏரி, ஒக்கியம் மடுவு, பக்கிங்ஹாம் கால்வாய் மேம்பாலங்கள் போன்ற பகுதிகளுக்கு இரவு 2 மணிக்கு வருகை தந்து, என்னுடைய தொகுதிக்கு மட்டும் தொடர்ந்து 5 முறை துணை முதலமைச்சர் அவர்கள் வருகை புரிந்து, ஆய்வு மேற்கொண்டு, அங்கு பல்வேறு பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டு, அந்தப் பணிகளை முடித்ததனால் தான் இன்றைக்கு நான் பட்டியலிட்ட இவ்வளவு பணிகளும் நடைபெறுவதற்கு காரணமானவர் துணை முதலமைச்சர் அவர்கள். நகர் நலச் சங்க நிர்வாகிகள் மற்றும் பொது மக்களின் பாராட்டையும் வாழ்த்துகளையும் பெற்ற துணை முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மழை, வெள்ளம், மிகப் பெரிய சீற்றத்தோடு இருக்கும்போதும் கூட மீனவ சமுதாய மக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துகின்ற வகையில், இன்றைக்கு மாவட்ட பொறுப்பு அமைச்சராக இருக்கக்கூடிய, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடன் அந்த சமுதாய மக்கள் கடற்கரையோரம் அந்த அலைச் சீற்றத்திலும் வந்து பார்வையிட்டு, அந்த மக்களுடைளய நல்வாழ்வுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு உறுதிபடுத்துகின்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்திருக்கின்ற ஒரு முதலமைச்சரை இன்றைக்கு நாம் பெற்றிருக்கிறோம். எல்லோருக்கும் எல்லாம் என்கிற நிலையில் இன்றைக்கு இயங்கி வருகின்ற திராவிட மாடல் ஆட்சியி ன்கீழ் நாம் சிறப்போடு சோழிங்கநல்லூர் தொகுதியில் நாம் நன்றி சொல்கிறோம் என்று சொன்னால், கடந்த கால ஆட்சியில் எந்தப் பணியும் நடைபெறாததை இன்றைக்கு இந்த நான்காண்டுகளில் தமிழ்நாட்டில் மிகப் பெரிய தொகுதியாக இருந்தாலும் சோழிங்கநல்லூர் தொகுதியில் அனைத்துப் பணிகளும் நிறைவேற்றிய திராவிட முதல்வரின்கீழ் பணியாற்றுவதில் பெருமைக்குரியதாக இருக்கின்றது.

எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்றும், அதனை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி அந்தப் பணிகளையும் முடித்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு பணிகளும் நடைபெறுவதற்கு சோழிங்கநல்லூர் தொகுதியையும் தன் தொகுதியாக ஏற்று, பணிகள் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த எங்களுடைய மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றிணைவோம் தமிழ் மூச்சாய், வெகுண்டெழுவோம் தமிழனாய், திராவிடனாய் உறுதி ஏற்போம், வெல்வோம் 200, படைப்போம் வரலாறு, தலைவர் தளபதியினுடைய கரத்தை வலுப்படுத்துவோம், வலுப்படுத்துவோம். மீண்டும் 2026 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமையும் என்ற நம்பிக்கையோடு (மேசையைத் தட்டும் ஒலி) உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

சோழிங்கநல்லூர் சர்வே எண் 439, 439/17, 439/7, 439/15, 439/3B, 439/3A, 439/1B கிராம நத்தத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். செம்மஞ்சேரியில் சர்வே எண் 3337 தரிசு இடத்திதல் 200 குடும்பங்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

காரப்பாக்கம் சர்வே எண் 160B. 161B, 165, 170, 171/1, 172, 169/2, 170/2, 123/9 இவைகள் அனைத்திற்கும் வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும்.

ஒக்கியம் துரைப்பாக்கம் மூட்டைக்காரன் சாவடி சர்வே எண் 272/1A, 164/2, 140, 145, 170, 185, 222, 110 ஆகிய இடங்களுக்கு பட்டா வழங்க வேண்டும். ஜல்லடையான்பேட்டை திருவள்ளூர் நகர் சர்வே எண் 220 மற்றும் 221க்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும்.

பள்ளிக்கரணை சர்வே எண். 23/1A, 663/5C, 121,121B, 118, 101, 71, 657/3A2, 3A3, 1B3 வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும்.

ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகரில் சர்வே எண் 282/1,2,3 ற்கு புழு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும். புழுதிவாக்கம் சர்வே எண் 42/6, 44/16, 46/1, 229, 230/16, 76/2 கிராம நத்தம் வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும்.

பெருங்குடி கல்லுக்குட்டை பகுதியில் உள்ள சர்வே எண் 31 முதல் 37 வரை மற்றும் 234 முதல் 237 வரை உள்ள சர்வே எண்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

கந்தன்சாவடி KPK நகர் சர்வே எண் 658/A. 1B பட்டா வழங்க வேண்டும். பெரும்பாக்கம் சர்வே எண் 441, 429/6 வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும். பெரும்பாக்கம் சர்வே எண் 429/25ல் விடுபட்டுள்ள 115 நபர்களுக்கு பட்டா வழங்க வேண்டும். உள்ளகரம் சர்வே எண் 90,91 தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேடம்பாட்டு வாரியம் மூலம் மனைப் பிரிவுகளாகப் பிரித்து இடஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கு பட்டா வழங்க வேண்டும்.

ஒக்கியம் துரைப்பாக்கம் சர்வே எண் 189, 75/1, 264/2, 272/1A, 49, 50, 58, 81, 82, 83, 84, 85, 161, 327, 315, 316, 319 ஆகியவற்றிற்கு பட்டா வழங்க வேண்டும். ஈஞ்சம்பாக்கம் சர்வே எண் 87/2 பட்டா வழங்க வேண்டும்.

வார்டு எண் 189 பள்ளிக்கரணை சர்வே 330, 627 பட்டா வழங்க வேண்டும் பெருங்குடி சர்வே எண் 159/2, 159/3, 181/1, 181/2 183/1, 183/2, 183/3, 184/1, 184/2, 184/3, 187 -ல் வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும். வேங்கைவாசல் சர்வே எண். 2/16, நேருநகர் பகுதியில் பட்டா வழங்க வேண்டும்.

கோவிலம்பாக்கம் சர்வே எண் 405, 403/2, 403/3, 390/2, 409/1, 410/1 இவைகள் அனைத்திற்கும் வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும்.

கோவிலம்பாக்கம் சத்யா நகர் சர்வே எண் 409/1, 410/1 தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் மனைப்பிரிவுகளாக பிரித்து இட ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கு பட்டா வழங்க வே